# BreastScreen WA

Tamil

**Screening mammography for women with a family history of breast cancer**

## மார்பகப் புற்றுநோய் குறித்த குடும்ப வரலாறு உள்ள பெண்களுக்கான மார்பகப் புற்று சோதனை



'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யு ஏ' (BreastScreen WA) என்பது பெண்களுக்கான இலவச மார்பகப் புற்று சோதனை அளிக்கும் சேவையாகும். 50-லிருந்து 69 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுக்கான முக்கிய மருத்துவ சோதனையாகும் இது, ஆனாலும் 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் இச் சோதனைக்கென செல்லலாம். மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள உறவினர் ஒருவர் உங்களுக்கு இருந்தால், இந்த நோய் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் விடயங்களை இந்த சிற்றேடு உங்களுக்கு அளிக்கலாம்.

### 'மார்பகப் புற்று குறித்த குடும்ப வரலாறு' என்றால் என்ன அர்த்தம்?

- உங்களது குடும்பத்தில் குறைந்த பட்சம் ஒருவருக்காவது மார்பகப் புற்று நோய் இருந்திருக்க வேண்டும்.
- ஒரே குடும்பத்தினைச் சார்ந்த சில-பல குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நோய் இருக்கிறது என்று கண்டறியப்படும் பொழுது, இந்த நோய் மரபு வழியாக ஏற்படுகிறதா என யோசிப்பது இயற்கையே ஆகும்.
- மார்பகப் புற்று நோய் மரபு வழியாகப் பரவுவதில்லை என்றாலும், மார்பகப் புற்றினை ஏற்படுத்தும் 'தவறிய' மார்பகப் புற்று மரபணு (faulty breast cancer genes) க்களை ஒருவர் முந்தைய சந்ததியினரிடமிருந்து பெறக்கூடும். ஒரு பெண்ணிடம் இந்தத் 'தவறிய' மரபணு இருந்தால், அவருக்கு இந் நோய் வருவதற்கான ஆபத்துக் கூறு அதிகமாகும், ஆனால் அவருக்கு மார்பகப் புற்று கட்டாயம் வரும் என்பது அவசியம் அல்ல.
- பெரும்பான்மை மார்பகப் புற்று நோய்கள் எக்காரணமும் இன்றி, மரபுவழிக் காரணம் எதுவும் இல்லாமலேயே ஏற்படுகின்றன. ஏற்படும் அனைத்துப் புற்றுகளிலும் குடும்ப வழிப்பட்ட மார்பகப் புற்றானது 1-லிருந்து 5 சதவீதம் மட்டுமேயாகும்.

### மார்பகப் புற்றுக் குடும்ப வரலாறு உள்ள பெண்களுக்கு சாதகமான தகவல்கள்

தமது குடும்பத்தில் மற்றவர்களுக்கும் மார்பகப் புற்று இருந்திருக்கிறது என அறியும் பெண்களில் பலருக்கும் இது ஒரு கவலையளிக்கும் விடயமாகும். இருப்பினும் கீழ்வரும் விடயங்களை நினைவில் கொள்வது முக்கியமாகும்:

- ஆஸ்திரேலியப் பெண்களில் ஒன்பதில் ஒருவருக்கு மார்பகப் புற்று ஏற்படும்.
- அதிகரிக்கும் வயதே மார்பகப் புற்றிற்குப் பொதுவான காரணமாகும். பெண்களில் பெரும்பான்மையானோருக்கு இந்த நோய் தற்செயலாகவே ஏற்படுகிறது, குடும்ப வழிக் காரணங்களால் அல்ல.
- உங்கள் தாயாருக்கோ அல்லது சகோதரிக்கோ மார்பகப்புற்று இருந்தால், உங்களுக்கும் இந் நோய் இயற்கையாகவே ஏற்படும் என்று அர்த்தம் அல்ல.
- உங்களுக்கு மார்பகப் புற்று உருவானால், தவறான மரபணுக்களை நீங்கள் பெற்றிருப்பது உறுதி என்றோ அல்லது உங்கள் குழந்தைக்கும் இது உங்கள் மூலமாகப் பரவும் என்றோ அர்த்தம் கிடையாது.
- மார்பகப் புற்று ஏற்படும் 10 பெண்களில் 9 பேருக்கு மார்பகப் புற்றிற்கான குடும்ப வரலாறு எதுவும் இல்லை.

### கீழ் வரும் தருணங்களில் குடும்ப வரலாறு அதி முக்கியமானதாகிறது:

- உங்கள் குடும்பத்தின் ஏதாவது ஒரு வழியினர் பக்கமாக (தாய் அல்லது தந்தையின் வழியில்) ஒன்றிற்கும் மேற்பட்ட உறவினருக்கு மார்பகப் புற்று இருப்பது கண்டறியப்படும் வேளையில்.
- இந்த உறவினருக்கு மார்பகப் புற்று இருப்பது கண்டறியப்பட்ட போது அவர்களது வயது 50-க்கும் மேற்பட்டு இருந்தால்.
- மார்பகப் புற்று உள்ள இந்த உறவினர்கள் உங்களுக்கு நெருங்கிய உறவினராக (ஒன்றுவிட்ட சகோதரி என்பதை விட சகோதரியாக) இருக்கும் போது.
- புற்று இரு மார்பகங்களிலும் இருக்கும் போதும், ஆண் உறவினர் ஒருவருக்கு மார்பகப் புற்று இருக்கும் வேளையிலும், மற்றும் குடும்பத்தில் எவருக்காவது மார்பகப் புற்று மற்றும் கருக்கொடிப் புற்று (ovarian cancer) இருக்கும் போதும்.

**For an appointment phone 13 20 50**

## மார்பகப் புற்றுக்கான குடும்ப வரலாறு எனக்கு இருந்தால், 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யூ ஏ' (BreastScreen WA) அமைப்பினரின் சேவையை அணுகும் போது எவ்வித பாதிப்பு ஏற்படும்?

மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்வது 50-லிருந்து 69 வயதான பெண்களுக்கு அதிகப் பயன் அளிக்கிறது என்பதை ஆய்வு முடிவுகள் காண்பிப்பதால், இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இச் சோதனையை இவ் வயதுப் பெண்கள் மேற்கொள்ள வேண்டுமென 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யூ ஏ' பரிந்துரைக்கிறது. 40-லிருந்து 49 வயது வரைக்கும் உள்ள பெண்களும், 70 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் இந்த மார்பகப் புற்றுச் சோதனையை மேற் கொள்ளலாம்.

இச் சோதனையை மேற்கொள்ளும் போது, மார்பகப் புற்று சம்பந்தப்பட்ட குடும்ப வரலாற்றுத் தகவல்களை 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யூ ஏ' அமைப்பினர் சேகரிப்பர். இந்த நோய் குறித்த குடும்ப வரலாற்றின் தன்மையைப் பொறுத்து, சில பெண்களுக்கு இந்த சோதனைக்கென அடிக்கடி செல்லும் தேவை ஏற்படலாம்.

## மார்பகப் புற்றிற்கான குடும்ப வரலாறு எனக்கிருந்தால், எந்த வயதிலிருந்து சோதனையை நான் மேற்கொள்ள வேண்டும், மற்றும் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை இச் சோதனை தேவைப்படும்?

கீழ் வரும் விடயங்களில் ஏதாவது பொருந்தி வரும் என்றால், குறிப்பிடத் தக்க மார்பகப் புற்றுக் குடும்ப வரலாறுள்ள 40 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு முறை இச் சோதனையை மேற்ொள்ளத் தகுதி பெறுவர்.

- 50-வயதிற்கும் முன்னதாக மார்பகப் புற்று இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள மிக நெருங்கிய உறவினர் (தாய், சகோதரி, மகள், தந்தை, மகன், சகோதரன்) இருந்தால்.
- இரு மார்பகங்களிலும் புற்று இருப்பதாகக் கண்டறியப்பட்ட மிக நெருங்கிய உறவினர் ஒருவர் இருந்தால் (மார்பகப் புற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட வயது எதுவாக இருந்தாலும்).
- மார்பகப் புற்றுள்ள மிக நெருங்கிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறவினர் இருந்தால் (மார்பகப் புற்று நோய் இருப்பது கண்டுபிக்கப்பட்ட வயது எதுவாகவும் இருக்கலாம்).

மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட 50 வயதிற்கும் மேற்பட்ட மிக நெருங்கிய ஒரு உறவினரையுடைய பெண்களுக்கு, இந்த நோய் ஏற்படுவதற்கான ஆபத்து, சமூகத்தில் வாழும் மற்ற சராசரிப் பெண்களைக் காட்டிலும் அதிகமானதல்ல. இப் பெண்கள் இரு வருடங்களுக்கு ஒரு முறை மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்ளலாம்.

## நான் வேறு என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குடும்பத்தின் மார்பகப் புற்று நோய் வரலாறு குறித்து நீங்கள் கவலைப்பட்டால், உங்களது தனிநபர் சூழ்நிலைகளைப் பற்றி உங்களது குடும்ப மருத்துவருடன் நீங்கள் ஆலோசிக்க வேண்டும். உங்கள் குடும்பத்தில் யாருக்காவது மார்பகப் புற்று இருப்பது புதிதாகக் கண்டறியப்பட்டால், 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யூ ஏ'- வினருக்கும், உங்களது பொது மருத்துவருக்கும் இதை நீங்கள் தெரிவிப்பது அவசியமாகும்.

## நினைவிருக்கட்டும், உங்களது மார்பகப் பகுதி குறித்து கவனமாயிருங்கள்:

- அசாதாரணமான மாற்றம் ஏதும் உங்கள் மார்பகங்களில் காணப்படுகிறதா என்று கவனித்து வரவும்.
- உங்களது மார்பகப் பகுதியில் மாற்றங்கள் எதுவும் இருப்பதை நீங்கள் கவனித்தால், உங்களது பொது மருத்துவரை உடனே பாருங்கள்.
- உங்களது மார்பகங்களை வருடத்திற்கு ஒரு முறை சோதிக்குமாறு உங்களது பொது மருத்துவரைக் கேளுங்கள்.

## கேள்விகள் ஏதும் உள்ளனவா?

'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் டபிள்யூ ஏ' அமைப்பின் அலுவலர்கள் உங்கள் கேள்வி எதற்கும் தாராளமாகப் பதிலளிப்பர். (08) 9323 6700 எனும் இலக்கத்தினை அழையுங்கள், மற்றும் உள்ளகப் பகுதிகளில் வாழும் பெண்கள் 1800 800 033 எனும் இலக்கத்தினை இலவசமாக அழைக்கலாம். 1800 241 708 என்பது TTY இலக்கம் ஆகும்.

13 20 50 எனும் எண்ணை (உள்ளூர் அழைப்புக் கட்டணத்திற்கு) அழைப்பதன் மூலம் சந்திப்புவேளை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ளலாம்

இலவச உரைபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், முதலில் 13 14 50 எனும் எண் மூலம் 'மொழிபெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் சேவை' (TIS) யினை அழைத்து, 13 20 50 எனும் இலக்கத்தின் மூலம் எமது முன்பதிவுச் சேவையினருடன் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு கேளுங்கள்.

Department of Health
GOVERNMENT OF WESTERN AUSTRALIA

BreastScreen WA
WA's only accredited screening service

BreastScreen AUSTRALIA
A joint Australian, State and Territory Government Program

**www.breastscreen.health.wa.gov.au**
© BreastScreen WA, Department of Health
Telephone (08) 9323 6700 Facsimile (08) 9323 6799 TTY 1800 241 708 Bookings 13 20 50

OA004217 OCT'11